# எட்டாம் வகுப்பு தமிழ் (வினாடி-வினா)

மதிப்பெண்-117

NAME: *

1.மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ………………………. * 1 point

- (•) அ) வைப்பு
- ( ) ஆ) கடல்
- ( ) இ) பரவை
- ( ) ஈ) ஆழி

2.'என்றென்றும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ……………… 1 point

- ( ) அ) என் + றென்றும்
- (•) ஆ) என்று + என்றும்
- ( ) இ) என்றும் + என்றும்
- ( ) ஈ) என் + என்றும்

3.'வானமளந்தது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது …………………… * 1 point

- ( ) அ) வான + மளந்தது
- ( ) ஆ) வான் + அளந்தது
- (•) இ) வானம் + அளந்தது
- ( ) ஈ) வான் + மளந்தது

4.'அறிந்தது + அனைத்தும்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் …………………. * 1 point

- ( ) அ) அறிந்தது அனைத்தும்
- ( ) ஆ) அறிந்தனைத்தும்
- (•) இ) அறிந்ததனைத்தும்
- ( ) ஈ) அறிந்துனைத்தும்

5.'வானம் + அறிந்த' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ………………… * 1 point

- ( ) அ) வானம் அறிந்து
- ( ) ஆ) வான் அறிந்த
- (•) இ) வானமறிந்த
- ( ) ஈ) வான்மறிந்த

6.பறவைகள் ………………… பறந்து செல்கின்றன. * 1 point

- ( ) அ) நிலத்தில்
- (•) ஆ) விசும்பில்
- ( ) இ) மரத்தில்
- ( ) ஈ) நீரில்

7.இயற்கையைப் போற்றுதல் தமிழர் …………………….. * 1 point

- (•) அ) மரபு
- ( ) ஆ) பொழுது
- ( ) இ) வரவு
- ( ) ஈ) தகவு

8.'இருதிணை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ……………………….. * 1 point

- (•) அ) இரண்டு + திணை
- ( ) ஆ) இரு + திணை
- ( ) இ) இருவர் + திணை
- ( ) ஈ) இருந்து + திணை

9.'ஐம்பால்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது …………………… * 1 point

- ( ) அ) ஐம் + பால்
- (•) ஆ) ஐந்து + பால்
- ( ) இ) ஐம்பது + பால்
- ( ) ஈ) ஐ + பால்

www.Padasalai.Net

10.தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற ……………………… காரணமாக அமைந்தது. * 1 point

- அ) ஓவியக்கலை
- ஆ) இசைக்கலை
- இ) அச்சுக்கலை (selected)
- ஈ) நுண்கலை

11.வளைந்த கோடுகளால் அமைந்த மிகப்பழைய தமிழ் எழுத்து …………………… என அழைக்கப் படுகிறது. * 1 point

- அ) கோட்டெழுத்து
- ஆ) வட்டெழுத்து (selected)
- இ) சித்திர எழுத்து
- ஈ) ஓவிய எழுத்து

12.தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் …………………… * 1 point

- அ) பாரதிதாசன்
- ஆ) தந்தை பெரியார் (selected)
- இ) வ.உ. சிதம்பரனார்
- ஈ) பெருஞ்சித்திரனார்

13.இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் ………………………… * 1 point

- அ) இ, ஈ
- ஆ) உ, ஊ (selected)
- இ) எ, ஏ
- ஈ) அ, ஆ

14.ஆய்த எழுத்து பிறக்கும் இடம் ……………………………….. * 1 point

- அ) மார்பு
- ஆ) கழுத்து
- இ) தலை (selected)
- ஈ) மூக்கு

15.வல்லின எழுத்துகள் பிறக்கும் இடம் ……………………….. * 1 point

- அ) தலை
- ஆ) மார்பு (selected)
- இ) மூக்கு
- ஈ) கழுத்து

16.நாவின் நுனி அண்ணத்தின் நுனியைப் பொருத்துவதால் பிறக்கும் எழுத்துகள் ………………….. * 1 point

- அ) க், ங்
- ஆ) ச், ஞ்
- இ) ட், ண் (selected)
- ஈ) ப், ம்

17.கீழ்இதழும் மேல்வாய்ப்பல்லும் இணைவதால் பிறக்கும் எழுத்து …………………….. * 1 point

- அ) ம்
- ஆ) ப்
- இ) ய்
- ஈ) வ் (selected)

18.பள்ளிக்குச் சென்று கல்வி …………………… சிறப்பு. * 1 point

- அ) பயிலுதல் (selected)
- ஆ) பார்த்தல்
- இ) கேட்டல்
- ஈ) பாடுதல்

19.செஞ்சொல் மாதரின் வள்ளைப்பாட்டிற்கேற்ப முழவை மீட்டுவது …………………… * 1 point

- அ) கடல்
- ஆ) ஓடை (selected)
- இ) குளம்
- ஈ) கிணறு

www.Padasalai.Net

20.'நன்செய்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ......................... * 1 point

- அ) நன் + செய்
- ஆ) நன்று + செய்
- இ) நன்மை + செய்
- ஈ) நல் + செய்

21.'நீளுழைப்பு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...................... * 1 point

- அ) நீளு + உழைப்பு
- ஆ) நீண் + உழைப்பு
- இ) நீள் + அழைப்பு
- ஈ) நீள் + உழைப்பு

22.'சீருக்கு + ஏற்ப' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ...................... * 1 point

- அ) சீருக்கு ஏற்ப
- ஆ) சீருக்கேற்ப
- இ) சீர்க்கேற்ப
- ஈ) சீருகேற்ப

23.'ஓடை + ஆட' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ...................... * 1 point

- அ) ஓடைஆட
- ஆ) ஓடையாட
- இ) ஓடையோட
- ஈ) ஓடைவாட

24.வானில் கரு ...................... தோன்றினால் மழை பொழியும் என்பர். * 1 point

- அ) முகில்
- ஆ) துகில்
- இ) வெயில்
- ஈ) கயல்

25.முறையான உடற்பயிற்சியும் சரிவிகித உணவும் ................ யும் ஓட்டிவிடும். * 1 point

- அ) பாலனை
- ஆ) காலனை
- இ) ஆற்றலை
- ஈ) நலத்தை

26.'விழுந்ததங்கே' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........................ * 1 point

- அ) விழுந்த + அங்கே
- ஆ) விழுந்த + ஆங்கே
- இ) விழுந்தது + அங்கே
- ஈ) விழுந்தது + ஆங்கே

27.'செத்திறந்த' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ......................... * 1 point

- அ) செ + திறந்த
- ஆ) செத்து + திறந்த
- இ) செ + இறந்த
- ஈ) செத்து + இறந்த

28.பருத்தி + எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ............................ * 1 point

- அ) பருத்தி எல்லாம்
- ஆ) பருத்தியெல்லாம்
- இ) பருத்தெல்லாம்
- ஈ) பருத்திதெல்லாம்

29.செவ்விந்தியர்கள் நிலத்தைத் ...................... மதிக்கின்றனர். * 1 point

- அ) தாயாக
- ஆ) தந்தையாக
- இ) தெய்வமாக
- ஈ) தூய்மையாக

www.Padasalai.Net

30.'இன்னோசை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது …………………….. * 1 point

- அ) இன் + ஓசை
- ஆ) இனி + ஓசை
- இ) இனிமை + ஓசை (selected)
- ஈ) இன் + னோசை

31.'பால் + ஊறும்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் …………………….. * 1 point

- அ) பால்ஊறும்
- ஆ) பாலூறும் (selected)
- இ) பால்லூறும்
- ஈ) பாஊறும்

32.மாடு வயலில் புல்லை மேய்ந்தது – இத்தொடரிலுள்ள வினைமுற்று …………………… * 1 point

- அ) மாடு
- ஆ) வயல்
- இ) புல்
- ஈ) மேய்ந்தது (selected)

33.பின்வருவனவற்றுள் இறந்தகால வினைமுற்று ………………….. 1 point

- அ) படித்தான் (selected)
- ஆ) நடக்கிறான்
- இ) உண்பான்
- ஈ) ஓடாது

34.பின்வருவனவற்றுள் ஏவல் வினைமுற்றுச் சொல் ………………. * 1 point

- அ) செல்க
- ஆ) ஓடு (selected)
- இ) வாழ்க
- ஈ) வாழிய

35.புகழாலும் பழியாலும் அறியப்படுவது ………………………… * 1 point

- அ) அடக்கமுடைமை
- ஆ) நாணுடைமை
- இ) நடுவுநிலைமை (selected)
- ஈ) பொருளுடைமை

36.பயனில்லாத களர்நிலத்திற்கு ஒப்பானவர்கள் …………………… * 1 point

- அ) வலிமையற்றவர்
- ஆ) கல்லாதவர் (selected)
- இ) ஒழுக்கமற்றவர்
- ஈ) அன்பில்லாதவர்

37.'வல்லுருவம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ……………………… * 1 point

- அ) வல் + உருவம்
- ஆ) வன்மை + உருவம் (selected)
- இ) வல்ல + உருவம்
- ஈ) வ + உருவம்

38.நெடுமை + தேர் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் …………………….. * 1 point

- அ) நெடுதேர்
- ஆ) நெடுத்தேர்
- இ) நெடுந்தேர் (selected)
- ஈ) நெடுமைதேர்

39.'வருமுன்னர்' எனத் தொடங்கும் குறளில் பயின்று வந்துள்ள அணி …………………….. * 1 point

- அ) தற்குறிப்பேற்ற அணி
- ஆ) எடுத்துக்காட்டு உவமை அணி
- இ) உவமை அணி (selected)
- ஈ) உருவக அணி

www.Padasalai.Net

40.உடல்நலம் என்பது ........................... இல்லாமல் வாழ்தல் ஆகும். * 1 point

- அ) அணி
- ஆ) பணி
- இ) பிணி
- ஈ) மணி

41.நீலகேசி கூறும் நோயின் வகைகள் ........................ * 1 point

- அ) இரண்டு
- ஆ) மூன்று
- இ) நான்கு
- ஈ) ஐந்து

42.'இவையுண்டார்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_ ........................... * 1 point

- அ) இ + யுண்டார்
- ஆ) இவ் + உண்டார்
- இ) இவை + உண்டார்
- ஈ) இவை + யுண்டார்

43.தாம் + இனி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ........................ * 1 point

- அ) தாம் இனி
- ஆ) தாம்மினி
- இ) தாமினி
- ஈ) தாமனி

44.காந்தியடிகள் ........................ போற்ற வாழ்ந்தார். * 1 point

- அ) நிலம்
- ஆ) வையம்
- இ) கனம்
- ஈ) வானம்

45.'நலமெல்லாம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ............................ * 1 point

- அ) நலம் + எல்லாம்
- ஆ) நலன் + எல்லாம்
- இ) நலம் + எலாம்
- ஈ) நலன் + எலாம்

46.இடம் + எங்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ...................... * 1 point

- அ) இடவெங்கும்
- ஆ) இடம் எங்கும்
- இ) இடமெங்கும்
- ஈ) இடம்மெங்கும்

www.Padasalai.Net

47.தொடக்க காலத்தில் மனிதர்கள் மருத்துவத்திற்கு ............................. பயன்படுத்தினர். * 1 point

- அ) தாவரங்களை
- ஆ) விலங்குகளை
- இ) உலோகங்களை
- ஈ) மருந்துகளை

48.தமிழர் மருத்துவத்தில் மருந்து என்பது ........................... நீட்சியாகவே உள்ளது. * 1 point

- அ) மருந்தின்
- ஆ) உடற்பயிற்சியின்
- இ) உணவின்
- ஈ) வாழ்வின்

49.உடல் எடை அதிகரிப்பதால் ஏற்படும் நோய்களுள் ஒன்று ......................... * 1 point

- அ) தலைவலி
- ஆ) காய்ச்ச ல்
- இ) புற்றுநோய்
- ஈ) இரத்தக்கொதிப்பு

50.சமையலறையில் செலவிடும் நேரம் ……………………… செலவிடும் நேரமாகும். * 1 point

- அ) சுவைக்காக
- ஆ) சிக்கனத்திற்காக
- இ) நல்வாழ்வுக்காக (selected)
- ஈ) உணவுக்காக

51.முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் …………………… எனப்படும். * 1 point

- அ) முற்று
- ஆ) எச்சம் (selected)
- இ) முற்றெச்சம்
- ஈ) வினையெச்சம்

52.கீழ்க்காணும் சொற்களில் பெயரெச்சம் …………………… * 1 point

- அ) படித்து
- ஆ) எழுதி
- இ) வந்து
- ஈ) பார்த்த (selected)

53.குறிப்பு வினையெச்சம் …………………… வெளிப்படையாகக் காட்டாது. * 1 point

- அ) காலத்தை (selected)
- ஆ) வினையை
- இ) பண்பினை
- ஈ) பெயரை

54.கற்றவருக்கு அழகு தருவது ………………………… * 1 point

- அ) தங்கம்
- ஆ) வெள்ளி
- இ) வைரம்
- ஈ) கல்வி (selected)

55.'கலனல்லால்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ……………………….. * 1 point

- அ) கலன் + லல்லால்
- ஆ) கலம் + அல்லால்
- இ) கலன் + அல்லால் (selected)
- ஈ) கலன் + னல்லால்

56.என் நண்பர் பெரும் புலவராக இருந்தபோதும் …………………… இன்றி வாழ்ந்தார் . * 1 point

- அ) சோம்பல்
- ஆ) அகம்பாவம் (selected)
- இ) வருத்தம்
- ஈ) வெகுளி

57.'கோயிலப்பா ' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது …………………… * 1 point

- அ) கோ + அப்பா
- ஆ) கோயில் + லப்பா
- இ) கோயில் + அப்பா (selected)
- ஈ) கோ + இல்லப்பா

58.பகைவன் + என்றாலும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ………………….* 1 point

- அ) பகைவென்றாலும்
- ஆ) பகைவனென்றாலும் (selected)
- இ) பகைவன்வென்றாலும்
- ஈ) பகைவனின்றாலும்

59.அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது ……………………….. * 1 point

- அ) விளக்கு
- ஆ) கல்வி (selected)
- இ) விளையாட்டு
- ஈ) பாட்டு

www.Padasalai.Net

60.கல்விப் பயிற்சிக்குரிய பருவம் ...................... * 1 point

- அ) இளமை
- ஆ) முதுமை
- இ) நேர்மை
- ஈ) வாய்மை

61.இன்றைய கல்வி ......................... நுழைவதற்குக் கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது. * 1 point

- அ) வீட்டில்
- ஆ) நாட்டில்
- இ) பள்ளியில்
- ஈ) தொழிலில்

62.பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது ................... ஆகும் * 1 point

- அ) எழுவாய்
- ஆ) செயப்படுபொருள்
- இ) பயனிலை
- ஈ) வேற்றுமை

63.எட்டாம் வேற்றுமை ....................... வேற்றுமை என்று அழைக்கப்படுகிறது. * 1 point

- அ) எழுவாய்
- ஆ) செயப்படுபொருள்
- இ) விளி
- ஈ) பயனிலை

64.உடனிகழ்ச்சிப் பொருளில் .............................. வேற்றுமை வரும். * 1 point

- அ) மூன்றாம்
- ஆ) நான்காம்
- இ) ஐந்தாம்
- ஈ) ஆறாம்

65.'அறத்தான் வருவதே இன்பம்' – இத்தொடரில் ........................ வேற்றுமை பயின்று வந்துள்ளது. * 1 point

- அ) இரண்டாம்
- ஆ) மூன்றாம்
- இ) ஆறாம்
- ஈ) ஏழாம்

66.'மலர் பானையை வனைந்தாள்' – இத்தொடர் ........................ பொருளைக் குறிக்கிறது. * 1 point

- அ) ஆக்கல்
- ஆ) அழித்தல்
- இ) கொடை
- ஈ) அடைதல்

67.காட்டிலிருந்து வந்த ...................... கரும்பைத் தின்றன. * 1 point

- அ) முகில்கள்
- ஆ) முழவுகள்
- இ) வேழங்கள்
- ஈ) வேய்கள்

68.'கனகச்சுனை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........................... * 1 point

- அ) கனகச் + சுனை
- ஆ) கனக + சுனை
- இ) கனகம் + சுனை
- ஈ) கனம் + சுனை

69.முழவு + அதிர என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ....................... * 1 point

- அ) முழவுதிர
- ஆ) முழவுதிரை
- இ) முழவதிர
- ஈ) முழவு அதிர

www.Padasalai.Net

70.பசியால் வாடும் ……………………… உணவளித்தல் நமது கடமை. * 1 point

- அ) பிரிந்தவர்க்கு
- ஆ) அலந்தவர்க்கு (selected)
- இ) சிறந்தவர்க்கு
- ஈ) உயர்ந்தவருக்கு

71.நம்மை ………………….. ப் பொறுத்துக் கொள்ள வேண்டும். * 1 point

- அ) இகழ்வாரை (selected)
- ஆ) அகழ்வாரை
- இ) புகழ்வாரை
- ஈ) மகிழ்வாரை

72.மறைபொருளைக் காத்தல் ……………….. எனப்படும். * 1 point

- அ) சிறை
- ஆ) அறை
- இ) கறை
- ஈ) நிறை (selected)

73.'பாடறிந்து' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ………………… * 1 point

- அ) பாட் + அறிந்து
- ஆ) பா + அறிந்து
- இ) பாடு + அறிந்து (selected)
- ஈ) பாட்டு + அறிந்து

74.முறை + எனப்படுவது என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ………………….. * 1 point

- அ) முறையப்படுவது
- ஆ) முறையெனப்படுவது (selected)
- இ) முறை எனப்படுவது
- ஈ) முறைப்படுவது

75.பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்தவை …………………… * 1 point

- அ) கல்வெட்டுகள்
- ஆ) செப்பேடுகள்
- இ) பனையோலைகள் (selected)
- ஈ) மண்பாண்டங்கள்

www.Padasalai.Net

76.பானை …………………. ஒரு சிறந்த கலையாகும். * 1 point

- அ) செய்தல்
- ஆ) வனைதல் (selected)
- இ) முடைதல்
- ஈ) சுடுதல்

77.'மட்டுமல்ல' எனும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது …………………… * 1 point

- அ) மட்டு + மல்ல
- ஆ) மட்டம் + அல்ல
- இ) மட்டு + அல்ல
- ஈ) மட்டும் + அல்ல (selected)

78.கயிறு + கட்டில் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ……………………. * 1 point

- அ) கயிற்றுக்கட்டில் (selected)
- ஆ) கயிர்க்கட்டில்
- இ) கயிறுக்கட்டில்
- ஈ) கயிற்றுகட்டில்

79.சொற்களுக்கு இடையே வேற்றுமை உருபு மறைந்து வருவது ……………………… * 1 point

- அ) வேற்றுமைத் தொகை (selected)
- ஆ) உம்மைத் தொகை
- இ) உவமைத் தொகை
- ஈ) அன்மொழித் தொகை

80.‘செம்மரம்’ என்னும் சொல் …………………. த்தொகை. * 1 point

- ○ அ) வினை
- ◉ ஆ) பண்பு
- ○ இ) அன்மொழி
- ○ ஈ) உம்மை

81.‘கண்ணா வா!’ – என்பது ……………….. த் தொடர். * 1 point

- ○ அ) எழுவாய்
- ◉ ஆ) விளி
- ○ இ) வினைமுற்று
- ○ ஈ) வேற்றுமை

82.அரசரை அவரது …………………… காப்பாற்றும். * 1 point

- ○ அ) செங்கோல்
- ○ ஆ) வெண்கொற்றக்குடை
- ◉ இ) குற்றமற்ற ஆட்சி
- ○ ஈ) படை வலிமை

83.சொல்வளமும் நற்பண்பும் உடையவர்கள் தாம் பேசும் ………………………… தகுதி அறிந்து பேசவேண்டும். * 1 point

- ○ அ) சொல்லின்
- ◉ ஆ) அவையின்
- ○ இ) பொருளின்
- ○ ஈ) பாடலின்

84.‘கண்ணோடாது’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ………………………. * 1 point

- ◉ அ) கண் + ஓடாது
- ○ ஆ) கண் + ணோடாது
- ○ இ) க + ஓடாது
- ○ ஈ) கண்ணோ + ஆடாது

85.‘கசடற’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ……………………….. * 1 point

- ○ அ) கச + டற
- ○ ஆ) கசட + அற
- ○ இ) கசடு + உற
- ◉ ஈ) கசடு + அற

86.‘என்று + ஆய்ந்து’ என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ………………………. * 1 point

- ◉ அ) என்றாய்ந்து
- ○ ஆ) என்று ஆய்ந்து
- ○ இ) என்றய்ந்து
- ○ ஈ) என் ஆய்ந்து

87.தோட்டத்தில் தம்பி ஊன்றிய …………………… எல்லாம் முளைத்தன. * 1 point

- ○ அ) சத்துகள்
- ○ ஆ) பித்துகள்
- ○ இ) முத்துகள்
- ◉ ஈ) வித்துகள்

88.என் நண்பன் செய்த தொழிலில் அவனுக்கு …………………… பெருகிற்று. * 1 point

- ○ அ) காரி
- ○ ஆ) ஓரி
- ◉ இ) வாரி
- ○ ஈ) பாரி

89.‘அக்களத்து’ என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ……………………. * 1 point

- ◉ அ) அ + களத்து
- ○ ஆ) அக் + களத்து
- ○ இ) அக்க + அளத்து
- ○ ஈ) அம் + களத்து

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com

90.கதிர் + ஈன என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் …………………. * 1 point

- அ) கதிரென
- ஆ) கதியீன
- இ) கதிரீன
- ஈ) கதிரின்ன

91.கனத்த மழை என்னும் சொல்லின் பொருள் ……………………… * 1 point

- அ) பெருமழை
- ஆ) சிறு மழை
- இ) எடை மிகுந்த மழை
- ஈ) எடை குறைந்த மழை

92.'வாசலெல்லாம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது …………………… * 1 point

- அ) வாசல் + எல்லாம்
- ஆ) வாசல் + எலாம்
- இ) வாசம் + எல்லாம்
- ஈ) வாசு + எல்லாம்

93.'பெற்றெடுத்தோம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது …………………… * 1 point

- அ) பெறு + எடுத்தோம்
- ஆ) பேறு + எடுத்தோம்
- இ) பெற்ற + எடுத்தோம்
- ஈ) பெற்று + எடுத்தோம்

94.கால் + இறங்கி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ………………….. * 1 point

- அ) கால்லிறங்கி
- ஆ) காலிறங்கி
- இ) கால் இறங்கி
- ஈ) கால்றங்கி

95.'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' என்று குறிப்பிடும் நூல் …………………………. * 1 point

- அ) தொல்காப்பியம்
- ஆ) அகநானூறு
- இ) புறநானூறு
- ஈ) சிலப்பதிகாரம்

96.சேரர்களின் தலைநகரம் …………………… * 1 point

- அ) காஞ்சி
- ஆ) வஞ்சி
- இ) தொண்டி
- ஈ) முசிறி

97.பழங்காலத்தில் விலையைக் கணக்கிட அடிப்படையாக அமைந்தது …………………… * 1 point

- அ) புல்
- ஆ) நெல்
- இ) உப்பு
- ஈ) மிளகு

98.ஆன்பொருநை என்று அழைக்கப்படும் ஆறு ………………. * 1 point

- அ) காவிரி
- ஆ) பவானி
- இ) நொய்யல்
- ஈ) அமராவதி

99.வீட்டு உபயோகப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் நிறைந்த மாவட்டம் * 1 point

- அ) நீலகிரி
- ஆ) கரூர்
- இ) கோயம்புத்தூர்
- ஈ) திண்டுக்கல்

www.Padasalai.Net

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

100.விகாரப் புணர்ச்சி ................ வகைப்படும். * 1 point

- அ) ஐந்து
- ஆ) நான்கு
- இ) மூன்று (selected)
- ஈ) இரண்டு

101.'பாலாடை' – இச்சொல்லுக்குரிய புணர்ச்சி ......................... * 1 point

- அ) இயல்பு (selected)
- ஆ) தோன்றல்
- இ) திரிதல்
- ஈ) கெடுதல்

102.சிங்கம் .......................... யில் வாழும். * 1 point

- அ) மாயை
- ஆ) ஊழி
- இ) முழை (selected)
- ஈ) அலை

103.கலிங்க வீரர்களிடையே தோன்றிய உணர்வு ........................... * 1 point

- அ) வீரம்
- ஆ) அச்சம் (selected)
- இ) நாணம்
- ஈ) மகிழ்ச்சி

104.'வெங்கரி' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........................... * 1 point

- அ) வெம் + கரி
- ஆ) வெம்மை + கரி (selected)
- இ) வெண் + கரி
- ஈ) வெங் + கரி

105.'என்றிருள்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ......................... * 1 point

- அ) என் + இருள்
- ஆ) எட்டு + இருள்
- இ) என்ற + இருள்
- ஈ) என்று + இருள் (selected)

106.'போல் + உடன்றன' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ....................... * 1 point

- அ) போன்றன
- ஆ) போலன்றன
- இ) போலுடன்றன (selected)
- ஈ) போல்உடன்றன

107.வானில் முழுநிலவு அழகாகத் .................. அளித்தது. * 1 point

- அ) தயவு
- ஆ) தரிசனம் (selected)
- இ) துணிவு
- ஈ) தயக்கம்

108.இந்த ................ முழுவதும் போற்றும்படி வாழ்வதே சிறந்த வாழ்வு. * 1 point

- அ) வையம் (selected)
- ஆ) வானம்
- இ) ஆழி
- ஈ) கானகம்

109.'சீவனில்லாமல் ' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ............. * 1 point

- அ) சீவ + நில்லாமல்
- ஆ) சீவன் + நில்லாமல்
- இ) சீவன் + இல்லாமல் (selected)
- ஈ) சீவ + இல்லாமல்

www.Padasalai.Net

110.'விலங்கொடித்து' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ............ * 1 point

- அ) விலம் + கொடித்து
- ஆ) விலம் + ஒடித்து
- இ) விலன் + ஒடித்து
- ◉ ஈ) விலங்கு + ஒடித்து

111.காட்டை + எரித்து என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ............ * 1 point

- அ) காட்டை எரித்து
- ◉ ஆ) காட்டையெரித்து
- இ) காடுஎரித்து
- ஈ) காடுயெரித்து

112.இதம் + தரும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .............. * 1 point

- ◉ அ) இதந்தரும்
- ஆ) இதம்தரும்
- இ) இதத்தரும்
- ஈ) இதைத்தரும்

113.எம்.ஜி.ஆர் .................... என்னும் ஊரில் கல்வி பயின்றார். * 1 point

- அ) கண்டி
- ◉ ஆ) கும்பகோணம்
- இ) சென்னை
- ஈ) மதுரை

114.எம்.ஜி.ஆர். படிப்பைத் தொடர முடியாமைக்குக் காரணம் ............. * 1 point

- அ) நடிப்பு ஆர்வம்
- ஆ) பள்ளி இல்லாமை
- ◉ இ) குடும்ப வறுமை
- ஈ) படிப்பில் ஆர்வமில்லாமை

115.இந்திய அரசு சிறந்த நடிகருக்கான ............ எனும் பட்டத்தை எம்.ஜி. டக்கு வழங்கியது. * 1 point

- அ) புரட்சித் தலைவர்
- ◉ ஆ) பாரத்
- இ) பாரத மாமணி
- ஈ) புரட்சி நடிகர்

www.Padasalai.Net

116.ஐந்தாம் உலகத் தமிழ்மாநாடு நடைபெற்ற இடம் ........... * 1 point

- அ) திருச்சி
- ஆ) சென்னை
- ◉ இ) மதுரை
- ஈ) கோவை

117.எம்.ஜி.ஆருக்கு அழியாத புகழைத் தேடித் தந்த திட்டம் ............. * 1 point

- ◉ அ) மதிய உணவுத் திட்டம்
- ஆ) வீட்டு வசதித் திட்டம்
- இ) மகளிர் நலன் திட்டம்
- ஈ) இலவசக் காலணித் திட்டம்

This content is neither created nor endorsed by Google.

Google Forms